Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

Y.M.C.A

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 09    [22-04-93]    வியாழக்கிழமை    ஓசை 63

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பெறுவோர் தொகை அதிகரிப்பு

1991 ஆம் ஆண்டிற்கான விசேட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 135 வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் சகல பாடசாலைகளினதும் மிகுதி புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல்கள் நேற்று வெளியிடப்பட்டன. இப்புலமைப்பரிசில் பெறும் மாணவரின் எண்ணிக்கை அடிப்படையில் சில முன்னணிப் பாடசாலைகளின் மொத்த முடிவுகள் வருமாறு: உடுவில் மகளிர் கல்லூரி — 48 பேர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை — 47 பேர், சென் ஜோன் பொஸ்கோ—43பேர், இந்து மகளிர் ஆரம்ப [4ஆம் பக்கம் பார்க்க]

# கறுக்காய்த் தீவுப் பகுதியில் கடும் மோதல்

# ராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்கியது





## முப்படைகளும் அகோரத்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கறுக்காய்தீவு நோக்கி இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை கடும் சண்டை மூண்டது, சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை இடம்பெற்ற இம் மோதலின்போது சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து அகோரத் தாக்குதலை மேற்கொண்ட போதும், புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதல் காரணமாக இராணுவம் நண்பகல் அளவில் இழப்புக்களுடன் முகாம் திரும்பியது, இதேவேளை, இம் மோதலின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 6. 30 மணியளவில் இரண்டு டாங்கிகள் சகிதம் ஆனையிறவு புகையிரத காவலரணிலிருந்து இரு முனைகளில் கறுக்காய்த்தீவு நோக்கி முன்னேற முற்பட்டனர். இவ்வாறு முன்னேற முற்பட்ட இராணுவத்தினர் மீது காவலரண்களில் இருந்து சுமார் 800 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இதே வேளை, இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் இராணுவ முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு நடத்தப்பட்டதோடு, கறுக்காய்த்தீவு கடற்பரப்பில் பிரவேசித்த கடற்படைக்குச் சொந்தமான நான்கு 'வோட்டர் ஜெட்' படகுகளும் பலத்த தாக்குதலை நடத்தின.

மேலும், சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஓர் உலங்கு வானூர்தியும், இரண்டு சியாமா செட்டி குண்டு வீச்சு விமானங்களும். ஒரு புக்காரா குண்டு வீச்சு விமானமும் மாறிமாறி அப்பகுதியில் பலத்த குண்டு வீச்சு தாக்குதலை நடத்தின இத்தாக்குதலின்போது 'புக்காரா' குண்டு வீச்சு விமானம் புதுக்காட்டுச் சந்தியில் வீசிய குண்டொன்று நடு வீதியில் பத்தடி ஆழத்தில் குழிஒன்றை ஏற்படுத்தியது. மற்றொருகுண்டு மாசார் வீதியில் வீழ்ந்து வெடித்தது.

இவ்வாறாக சிறிலங்காவின் முப்படைகளும் பலத்த தாக்குதலை மேற்கொண்ட வேளையிலும் விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிர தாக்குதல் காரணமாக நண்பகல் 11.30 மணியளவில், இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பியது.

இம் மோதலின் போது இராணுவத்தரப்பில் இருவர், விடுதலைப் புலிகளின் கிளைமோர் வெடியில் சிக்கி இறந்ததாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், இராணுவத்தினரின் இழப்பு இதைவிட அதிகமென ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

(86) (ச)

## ஹெலி தாக்குதலில் பெண்மணி காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர், ஹெலி தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 7-30 மணியளவில் இயக்கச்சி பேராலை பகுதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் சிவகுரு இராசம்மா(வயது 51) என்பவரே படுகாயமடைந்தார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்துகொண்டிருந்த போது ஹெலிகொப்டர் ஒன்று துரத்தித் தாக்கியபோதே தலையில் காயமடைந்ததாகவும் அவர் உடனேகீழே விழுந்து விட்டதாகவும் தெரியவருகின்றது. மேற்படி காயமடைந்தவர் தற்போது நினைவு திரும்பாத நிலையில் யாழ். வைத





சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலத்துக்கு அடியிலிருந்து மீட்கப்பட்ட மண்டை ஓடுகளையும் எலும்புகளையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

வும் பலர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இரண்டு டாங்கிகள் சகிதம் ஆனையிறவு புகையிரத காவலரணிலிருந்து இரு முனைகளில் கறுக்காய்த்தீவு நோக்கி முன்னேற முற்பட்டனர். இவ்வாறு முன்னேற முற்பட்ட இராணுவத்தினர் மீது காவலரண்களில் இருந்து சுமார் 800 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இதே வேளை, இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் இராணுவ முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு நடத்தப்பட்டதோடு, கறுக்காய்த்தீவு கடற்பரப்பில் பிரவேசித்த கடற்படைக்குச் சொந்தமான நான்கு 'வோட்டர் ஜெட்' படகுகளும் பலத்த தாக்குதலை நடத்தின.

மேலும், சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஓர் உலங்கு வானூர்தியும், இரண்டு சியாமா செட்டி குண்டு வீச்சு விமானங்களும், ஒரு புக்காரா குண்டு வீச்சு விமானமும் மாறிமாறி அப்பகுதியில் பலத்த குண்டு வீச்சு தாக்குதலை நடத்தின. இத்தாக்குதலின்போது புக்காரா' குண்டு வீச்சு விமானம் புதுக்காட்டுச் சந்தியில் வீசிய குண்டொன்று நடு வீதியில் பத்தடி ஆழத்தில் குழிஒன்றை ஏற்படுத்தியது. மற்றொருகுண்டு மாசார் வீதியில் வீழ்ந்து வெடித்தது.

இவவாறாக சிறிலங்காவின் முப்படைகளும் பலத்த தாக்குதலை மேற்கொண்ட வேளையிலும் விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிர தாக்குதல் காரணமாக நண்பகல் 11.30 மணியளவில், இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பியது.

இம்மோதலின் போது இராணுவத்தரப்பில் இருவர், விடுதலைப் புலிகளின் கிளைமோர் வெடியில் சிக்கி இறந்ததாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், இராணுவத்தினரின் இழப்பு இதை விட அதிகமென ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. (86) (ச)

## ஹெலி தாக்குதலில் பெண்மணி காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர், ஹெலி தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 7-30 மணியளவில் இயக்கச்சி பேராலை பகுதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் சிவகுரு இராசம்மா(வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் தனது மகனின் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்துகொண்டிருந்த போது ஹெலிகொப்டர் ஒன்று துரத்தித் தாக்கியபோதே தலையில் காயமடைந்ததாகவும் அவர் உடனேகீழே விழுந்து விட்டதாகவும் தெரியவருகின்றது. மேற்படி காயமடைந்தவர் தற்போது நினைவு திரும்பாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (86)(சி)

## மட்டக்களப்பு கிராமம் மீது எறிகணை தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடிக்குளம் பகுதியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ஆலங்குளம் மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல் நேற்று காலை 4 20 மணி முதல் நடாத்தப்பட்டுள்ளது.

## மோட்டார் ஊர்திப் பதிவு நேற்று முதல் ஆரம்பம்

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவு வேலைகளை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் நாடாவை வெட்டி கோண்டாவில் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

நேற்று முதல் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுகள் ஆரம்பமாகின என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மோட்டார் ஊர்தி உரிமையாளருக்கு அறியத்தருகின்றனர்.

## புலிகள் பற்றிய எச்சரிக்கை

# வன்முறையை தூண்ட அரசாங்கத்தின் முயற்சி

### ராவய ஆசிரியர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலில் ஏற்படப்போகும் தோல்வியை தாங்க முடியாத அரசாங்கம் வன்முறைகளை மீண்டும் தொடரும் ஒரு நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகள் கொழும்பின் கேந்திர நிலைகளில் குண்டு வைக்கலாம் என்று எச்சரிக்கை அமைந்துள்ளது என ராவய ஆசிரியர் பி. பி. சிக்கு தெரிவித்தார்.

தென்மாகாணத்தில் ஐ.தே.க. விற்கு ஏற்படவுள்ள தோல்வியில் இருந்து தம்மை பாதுகாக்கும் ஒரு முன்னோடி நடவடிக்கை இது என்றும் புலிகளின் பெயரை பயன்படுத்தி மீண்டும் ஒருவன்முறையை ஏவிவிட அரசாங்கம் முயல்கின்றது என்றார்.

கொழும்பில் குண்டுகளை விடுதலைப்புலிகளினாலும் அரசாங்கத்தினாலும் மட்டுமே வைக்கமுடியும் என்றும் இதுவரை கொழும்பில் வெடித்த குண்டுகள் அதிகமானவை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மண்டைஒடுகள் சிலவற்றில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள்

சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட அறுவரின் மண்டையோடுகளில் சிலவற்றில் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட துவாரங்கள் காணப்படுகின்றன.

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்களினது மண்டை ஓடுகளே இவையாக இருக்கலாம் என்பதை இவை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

இந்த மனித மண்டைஓடுகள் மூன்று இளம் பெண்களுடையதும், ஒரு சிறுமியினதும், இரு பாடசாலை சிறுவர்களினதும் என அறியப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக குழி ஒன்றை வெட்டிய போது இவை மீட்கப்பட்டமை தெரிந்ததே.

## 450 தமிழ் கைதிகளை விடுவிக்க கோரிக்கை

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 450 தமிழ்க் கைதிகளும் தம் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பகிரங்கமாக விடுத்துள்ளனர்.

தற்சமயம் பொரளை மகசீன் சிறையிலும், களுத்துறை புதிய சிறைச்சாலையிலும் சுமார் எழுநூறுக்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றுக் காலை6 மணிக்குஅமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணிக்கு நீக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது.

## பாராளுமன்ற அமர்வை சு. க. பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவால் இன்று ஆரம்பித்து வைக்கப்படும் பாராளுமன்ற ஐந்தாவது அமர்வை சிறிலங்கா சுதந்திர கட்சி பகிஷ்கரிக்கும் என்று அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிரிபால தெரிவித்தார்.

நேற்று மாலை கூட்டப்பட்ட கட்சி மகாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் பிரேமதாசா இங்கு உரையாற்ற வரும் போது தமது கட்சி உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு சமுகம் தரமாட்டார்கள் என்றும் அதன் பின்னர் நடைபெறும் கூட்ட நடவடிக்கையில் சுதந்திரக் கட்சி கலந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சட்டசபை சம்பவங்கள்; தமிழகத்தில் பஸ்மறியல்

### 2 பஸ்கள் தீக்கிரை; 14 சேதம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சியினர் நடத்தப்படும் விதத்தை ஆட்சேபித்து தமிழகமெங்கும் பஸ் மறியலில் ஈடுபட்ட 5000 காங்கிரஸ் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். பஸ்கள் மீது கல்வீச்சு நிகழ்த்திய காங்கிரஸ் உறுப்பினர்கள் 300 பேரும் கைதாகினர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வெளி. முதலீட்டாளருக்கு பிரஜா உரிமை வழங்க சட்டம்

(கொழும்பு)

வதிவிட விருந்தினர்களாக அனுமதி பெற்றிருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் வகையில் பிரஜாவுரிமைச் சட்டம் திருத்தப்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சட்டசபைஉண்ணாவிரதிகள் பலவந்தமாக வெளியேற்றம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் நேற்று பலத்த குழப்பங்கள் மத்தியில் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். நேற்று முன்தினம் பகல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து பின்னர் சட்டசபை உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டனர். பேரவைக்கு வெளியே சபைக்காவலர்கள் தம்மை மாறிமாறி தாக்கியதாக தி. மு. க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி கண்ணீர் மல்க கூறினார். இவரைத் தாக்குதலிலிருந்து காக்க முயன்ற இரு காங்கிரஸ் பெண் எம். எல். ஏக்களும் சபைக் காவலர்களால் தாக்கப்பட்டனர். தமிழக சட்டப் பேரவையில் பல ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கும் காங்கிரஸ் கட்சி பெண் எம். எல்.ஏ ஒருவர் இம் மாதிரியான அநியாயம் எப்போதும் நடந்ததில்லை என குறிப்பிட்டார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### செந்தமிழ்ப் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நுழைவாயில் ரிக்கற்றுகளை, யாழ். பூபாலசிங்கம்புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.(4640)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### நவீன சுகாதார விரிவுரைகள்

யுத்த கால சூழ்நிலையில் தமிழீழ தேசம் எங்கும் வாழும் மக்களுக்கு மருந்தில்லாமல் பூரண பாதுகாப்பு. முப்பது வருட சமூகசேவையாளர். முகவரி.கதிர்காமத்தம்பி ஜெகநாதன். இலக்கம் 11, குறசட் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [4733]

### தவறிவிட்டது

குடும்ப அட்டை, க. சிவனேஸ்வரி என்பவரின் அடையாள அட்டை ஆகியன முத்திரைச் சந்தைக்கும் திருநெல்வேலிப் பகுதிக்கும் இடையில் நேற்று காலை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ஈழநாதம்

# மேதினத்தை முன்னிட்டு மாட்டுவண்டி சவாரி போட்டி

(வடமராட்சி)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோட்ட மட்டத்திலான உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் வடமராட்சி கோட்ட இணைப்பாளர் திரு. வே. பூங்குன்றன் தலைமையில்நேற்று முன் தினம் 9மணியளவில் கரவெட்டி மூத்தவிநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பமானது.

முன்னோடியாக போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் நாவலர்மடம் பாடசாலையிலிருந்து மூத்த விநாயகர் ஆலய முன்றலுக்கு வாத்திய இசையுடன் அழைத்துச்செல்லப் பட்டனர்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா பைந்தமிழன் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மலையரசி ஆகியோர். மங்கள விளக்கேற்றி வைத்தனர். தமிழீழ தேசியக்கொடியை வடமராட்சி தளபதி திரு. அருணா ஏற்றி வைத்தார்.

நேற்று முன்தின நிகழ்வின் போது துலாபட்டைமூலம் நீர் இறைத்தல், கிடுகு பின்னல், பனைமரம் ஏறுதல்,தோட்டம் கொத்துதல், குட்டான் இழைத்தல் மற்றும் பல போட்டிகள் இடம்பெற்றன.

மாவட்ட மட்டத்தில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித் திடலில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மற்றைய போட்டிகள் மாவட்ட மட்டத்தில் எதிர்வரும் 27 ம் திகதிசெவ்வாய் கிழமை ஊரெழு அம்மன் கோயில் முன்றலில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

நடைபெறவிருக்கும் மாட்டு வண்டிச் சவாரி போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கம் உட்பட பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. (யோ)

### முத்திரையிடல்

யாழ் செயலக நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தினால் எதிர்வரும் 22, 23. 29, 30 ஆகிய திகதிகளிலும் காலை 8 30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் தராசுப் படிகளுக்கு (சீல்) முத்திரையிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள சகல கடை உரிமையாளர்களும், சந்தை வியாபாரிகளும் தவறாது தங்கள் நிறுத்தல் அளவை உபசரணங்களுக்குமுத்திரையிடுமாறுயாழ் செயலகநிறுவை, அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

### கலைவிழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் பிரிவின் கலைவிழா இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

தாளையடி பங்குத்தந்தை வணபிதா எம். டேவிட் தலைமையில் நடைபெறும் இக் கலைவிழாவில் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட திட்ட உதவிப்பணிப்பாளர் திரு. ம. செ. இரேனேயூசும் கலந்து கொள்வார்கள்.

இக்கலை விழாவில் நடனம், புராண இசை நாடகம், சமூக நாடகம், சரித்திர புரட்சி நாடகம், சமூக புரட்சி நாடகம், வில்லிசை ஆகியனஇடம் பெறவுள்ளன. (36)


இந்துமத குருமார் ஒன்றியம்

## தென்மராட்சி கிளை-கூட்டம்

இன்று 22-4-93 வியாழக்கிழமை இரவு 7. 00 மணிக்கு சாவகச்சேரி மட்டுவில் சாந்தநாயகி அ த க பாடசாலையில் தலைவர் கை. வாமதேவக் குருக்கள் தலைமையில் தென்மராட்சி கிளைக் கூட்டம் நடைபெறும். தென்மராட்சி கிளை இந்துமத குருமார் ஒன்றிய நிர்வாக சபை தெரிவு கிளைக் காரியாலயம் அமைத்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். எனவே தென்மராட்சி கோட்டத்தைச் சேர்ந்த இந்துமத குருமார்கள் அனைவரும் இக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு

வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்

பொதுச்செயலாளர்

(சி-6474)


# கொள்ளைச் சம்பவங்களால் தென்மாகாணத்தில் பதற்றம்

(கொழும்பு)

தென் மாகாணத்தைச் சேர்ந்த பல இடங்களில் ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத கோஷ்டியொன்று கடந்த இரு வாரங்களாக இரவு நேரக் கொள்ளைகளில் ஈடுபட்டிருப்பதால் பதற்ற நிலை தோன்றியிருப்பதாக கூறப்படுகிறது. திஸ்ஸமகாராம, அகுணகொல பெலஸ்ஸ வீரகெட்டிய, வலஸ்முல்ல பொலிஸ் வட்டாரங்களில் கடந்த பத்து தினங்களில் மட்டும் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளபோதும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இக் கொள்ளைக்கோஷ்டியினால் இதுவரையில் மூன்று லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை பணம் மற்றும் தங்க நகைகள் உட்படபல பொருள்கள் கொள்ளையிடப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்ளைக் கோஷ்டியில் நான்கு தொடக்கம் பத்துப்பேர் வரையில் உறுப்பினர்கள் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

### மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகம் ஆகியனவற்றில் பல முக்கியமான மருந்துவகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களுக்கான மருந்துவகைகளும், அம்பிசிலின் ஏறபு ஊசி, பனடோல், பிக்கோ மற்றும் அத்தியாவசியமான மருந்துகளுக்குமே பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள அரசினர் வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்களுக்கு வரும் பெரும்பாலான நோயாளிகள் வைத்தியசாலைகளில் மருந்துவகைகள் இல்லாததால் தனியார் மருந்துக்கடைகளில் அதிக கூடுதல் விலை கொடுத்து மருந்து வகைகளை வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். [24]

### சித்தாந்த பண்டிதர் பரீட்சை

(கொழும்புத்துறை)

சித்தாந்தபண்டிதர் பரீட்சை நாளைவெள்ளிக்கிழமைதொடங்கி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரவேசப்பத்திரமும், சுட்டிலக்கமும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### சிறுதானிய செய்கை வரட்சியால் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக சிறுதானியப் பயிர்கள் எரிந்து அழிந்து போகும்ஆபத்துநிலைதோன்றியுள்ளது.

யாழ். குடாநாட்டில் பெரும்போக செய்கை முடிவடைந்த பின்னர் பல விவசாயிகள் பயறு, எள்ளு, சணல், குரக்கன் போன்ற சிறுதானிய பயிர்களை செய்கை பண்ண முன்வந்தனர்.

கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் விவசாய பகுதியினரும் கமநல சேவை நிலையத்தினரும் சிறுதானிய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விதை தானியகளையும், பசளை வகைகளையும், மண்ணெண்ணெய் போன்றவற்றையும் கடனடிப்படையிலும், மானியமாகவும் கூட வழங்கிஇருந்தனர். [42]

### யோகாசன கருத்தரங்கு

சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினர் மாதாந்தம் நடத்தும் யோகாசன கருத்தரங்குத் தொடரில் ''நோய் தீர்க்கும் யோகாசனங்கள்'' என்னும் பொருளிலான விரிவுரையும், ''யோகம் என்பது என்ன?'' என்னும் பொருளிலான விரிவுரையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

செல்வி

### கைலைநாதன் வெண்ணிலா

எமது கல்லூரியின் உயர்தரம் 94 கணிதப் பிரிவில் கல்வி பயின்ற மாணவியாகிய செல்வி கைலைநாதன்

# வடக்கு கிழக்கிற்கு 385 டாக்டர்கள்

ஒரு வருட பயிற்சிக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள 385 புதிய டாக்டர்கள் வடக்கு, கிழக்கு பகுதி வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். வடக்கு, கிழக்கு பகுதி வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்பற்றாக்குறையைப் போக்குவதற்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# அதிகாரத்திற்கு வந்தால் 'கம்உதாவ' நிறுத்தப்படும்

– லலித்

[கொழும்பு]

நாம் அதிகாரத்திற்கு வந்தால்'கம்உதாவ' கிராம எழுச்சித் திட்டத்தை நிறுத்துவோம் என லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார். ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நீர் கொழும்பில் நடைபெற்றது. அதில்பேசிய லலித் மகாபொல புலமைப்பரிசில் திட்டம் என்னால் ஆரம்பிக்கப்பட்டதாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுத்து சீராக இயங்கச் செய்தால் ஈழம் உருவாகாது என இக்கட்சியின் உபதலைவரான காமினி திசநாயக்க தெரிவித்தார்.


## இனிப்பான செய்தி

சிறுவர் முதல் பெரியோர் வரை

பாவிக்க்கூடிய புதிய உணவு

## ★ திராட்சைப் பாகு ★

(முந்திரிகைப் பழத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட ஜாம்)

செயற்கை இரசாயனம் கலக்கப்படாதது

விரைவில் விற்பனைக்கு.

- ஜாம் வெற்றுப் போத்தல்கள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.
- பனை எமது தேசிய சொத்து பனையைப் பாதுகாத்து பயனைப்பெறுவோம்.

வடமராட்சி

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க கொத்தணி

திக்கம் வடிசாலை, அல்வாய்.

(3428)


## நினைவு கூருகின்றோம்...

### 1993-04-22

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா கடற்

## விரிவுரைகள்

யுத்த கால சூழ்நிலையில் தமிழீழ தேசம் எங்கும் வாழும் மக்களுக்கு மருந்தில்லாமல் பூரண பாதுகாப்பு. முப்பது வருட சமூக சேவையாளர், முகவரி. கதிர்காமத்தம்பி ஜெகநாதன், இலக்கம் 11, குறசட் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[4733]

## தவறிவிட்டது

குடும்ப அட்டை, க. சிவனேஸ்வரி என்பவரின் அடையாள அட்டை ஆகியன முத்திரைச் சந்தைக்கும் திருநெல்வேலிப் பகுதிக்கும் இடையில் நேற்று காலை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி/6479)

பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

நாடகம், சமூக புரட்சி நாடகம், வில்லிசை ஆகியனஇடம் பெறவுள்ளன. (36)

### இந்துமத குருமார் ஒன்றியம்

## தென்மராட்சி கிளை-கூட்டம்

இன்று 22-4-93 வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு சாவகச்சேரி மட்டுவில் சாந்தநாயகி அ.த.க பாடசாலையில் தலைவர் கை. வாமதேவக் குருக்கள் தலைமையில் தென்மராட்சி கிளைக் கூட்டம் நடைபெறும். தென்மராட்சி கிளை இந்துமத குருமார் ஒன்றிய நிர்வாக சபை தெரிவு கிளைக் காரியாலயம் அமைத்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். எனவே தென்மராட்சி கோட்டத்தைச் சேர்ந்த இந்துமத குருமார்கள் அனைவரும் இக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு
வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்
பொதுச்செயலாளர்

(சி-6474)

சித்தாந்தபண்டிதர் பரீட்சை நாளைவெள்ளிக்கிழமைதொடங்கி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரவேசப்பத்திரமும், சுட்டிலக்கமும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

பனத்தினர் மாதாந்தம் நடத்தும் யோகாசன கருத்தரங்குத் தொடரில் ''நோய் தீர்க்கும் யோகாசனங்கள்'' என்னும் பொருளிலான விரிவுரையும், ''யோகம் என்பது என்ன?'' என்னும் பொருளிலான விரிவுரையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

❋ ஜாம் வெற்றுப் போத்தல்கள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

❋ பனை எமது தேசிய சொத்து
பனையைப் பாதுகாத்து பயனைப்பெறுவோம்.

வடமராட்சி
தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க கொத்தணி
திக்கம் வடிசாலை, அல்வாய்.

(3428)

## கண்ணீர் அஞ்சலி

செல்வி
**கைலைநாதன் வெண்ணிலா**

எமது கல்லூரியின் உயர்தரம் 94 கணிதப் பிரிவில் கல்வி பயின்ற மாணவியாகிய செல்வி கைலைநாதன் வெண்ணிலா அவர்கள் இயற்கையெய்தியமை கேட்டு அதிர்ச்சியடைந்தோம். கல்வியில் சிறந்த ஆற்றலும், ஏனைய துறைகளிலும் ஆர்வமுடைய நல்ல ஒரு மாணவியை நாம் இழந்துவிட்டோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(4736)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-04-22

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அனலைதீவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு யாழ்-காங்கேசன்துறை ''காபர் வியூ'' உல்லாசவிடுதி சிறிலங்கா இராணுவ மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

தாஸ் (கஸ்பார் சூசைதாசன்-உயிலங்குளம், மன்னார்)

கப்டன் பவான் / ஐயா (பொன்னம்பலம் யோககுமார் - சுதுமலை, மானிப்பாய், யாழ்.

லெப். கிர்மானி (சிலுவைராசா ஜோன்சன் பேட்டன் - குருநகர். யாழ்.)

சுவர்ணன் (பொன்னையா சிறிபோஸ் - சிறுவிளான், யாழ்.)

1989 ஆம் ஆண்டு திருமலை கப்பல்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப்.கிருஷ்ணன் (ஆனந்தராசாகிருஷ்ணராசா - கும்புறுப்பிட்டி, திருமலை)

1991 ஆம் ஆண்டு மாசி மாதம் 10 ஆம் திகதி யாழ்-வல்வெட்டித்துறையில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சில் விழுப்புண் அடைந்து சிகிச்சையின்போது யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

மதி (தர்மராசா தயாபரன் - மாமுனை வடக்கு, செம்பியன்பற்று, யாழ்.)

1992 ஆம் ஆண்டு யாழ் - தீவகப்பகுதியில் வேவு பார்க்கச் சென்றவேளை சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

புனிதன் (நமசிவாயம் சிறிதரன் - ஹட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)

எல்லாளன் / நிசாந்தன் (பொன்னுத்துரை தங்கத்துரை-5ஆம் வட்டாரம், வேலணைமேற்கு, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6473]

### பதிவு
### செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா உணவகம்**
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

[சி-6438]

## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா உணவகம்**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6439)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
18. 08. 74

இறப்பு:
22. 03. 93

**செ. செல்வரஜனி**

புன்னகை பூத்த தோற்றம்
புவனத்தை வெல்லும் கோலம்
இன்னுமே நினைவிலுண்டு
எப்போது மீள்வாயம்மா?

பாவலர் துரையப்பா வீதி,
தெல்லிப்பழை.
தற்போதைய முகவரி:
நீதிமன்ற முகாம்,
மல்லாகம்.

உறவினர்கள்,
நண்பர்கள்.

(சி-6475)

உ
சிவமயம்

வாருங்கள்! வந்து பாருங்கள்!
பார்த்து ஆதரவு தாருங்கள்! மகிழ்ச்சியடையுங்கள்!
அச்சுவேலி இந்து இளைஞர் மன்ற வளர்ச்சி நிதிக்காக!
மாதனைக் கலாமன்றத்தினர் பெருமையுடன் வழங்கும்
வில்லிசைப் புலவர்: **சின்னமணியின்**

## ★★★ "காத்தவராயன்" ★★★

(வரலாற்று இசைக் கூத்து)

23.04.93 வெள்ளிக்கிழமை இரவு 8.00மணிக்கு அச்சுவேலி அருள்மிகு உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அண்மையில்.

அன்பளிப்பு: ரூபா **25/- 10/-**

இந்து இளைஞர் மன்றம்
அச்சுவேலி.

(4735)

சிந்தனைக்கு

உண்மையான மனிதனை உருவாக்குபவை நெருக்கடிகளும், சோதனைகளும் தான்; வசதிகளும், சலுகைகளும் அல்ல.

— யாரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# அரசாங்க ஊழியர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏன்?

வடபகுதி மீது சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள தடைகள் எவற்றையும் அகற்றுவதற்கோ, அன்றி முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கோ தயாராக இல்லை என்பது அதன் அண்மைய நடவடிக்கைகள் உணர்த்துமாப் போல் உள்ளன. இதனை, இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றிய பொறியியலாளர்கள், உதவியாளர்கள், மின் அத்தியட்சகர்கள், எழுதுவினைஞர்கள் உட்பட பலருக்கும், யாழ். தொலைத்தொடர்பு அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்ற உத்தரவுகள் வெளிப்படுத்துபவையாக உள்ளன.

இரண்டாம் கட்ட ஈழப்போர் 1990இன் நடுப்பகுதியில் ஆரம்பமானதைத் தொடர்ந்து வடபகுதியுடன் இருந்த சகல தொலைத்தொடர்புகளையும் மின்சாரத் தொடர்புகளையும் சிறிலங்கா அரசாங்கம் துண்டித்துக் கொண்டது. பின்னர் ஓரளவிற்கு சுழற்சி முறையிலாயினும், மின்சாரம் வழங்கக் கூடியதாக இருந்த சுன்னாகம் மின் நிலையத்தையும் குண்டுவீசி அழித்தது.

அதாவது வடபகுதி மீது அரசாங்கம் பொருளாதாரத் தடையை விதித்தபோது எரிபொருளுடன் சேர்த்து மின்சார விநியோகத்தையும் முற்றாகத் தடைசெய்ய முற்பட்டது. இதன் மூலம் தமிழரின் பொருளாதாரத்தை முற்றாக முடங்கச் செய்வதே சிறிலங்கா அரசின் திட்டமாக இருந்தது.

இருப்பினும், மின்சாரத்துறை சகல ஊழியர்கள், தொலைத்தொடர்பு அலுவலக ஊழியர்கள் ஆகியோர்களுக்கான சம்பளங்களை - காலதாமதம் ஆகியபோதும் - தொடர்ச்சியாக வழங்கியே வந்தது. ஆனால், திடீரென இவ் அலுவலக ஊழியர்களை அரசாங்கம் வெளிமாவட்டங்களுக்குமாற்றம் செய்துள்ளமையானது சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து தெளிவான ஒரு முடிவிற்கு வந்து விட்டதாகவே எண்ண வைக்கின்றது.

அதாவது, இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு உடனடியாகக் காணும் முயற்சியை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாகவோ, அன்றி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு இப்பொழுது காண முடியாது என்று அரசாங்கம் கருதுவதாகவோ எண்ண

# தேர்தலை கண்டு இப்போது மக்கள் அஞ்சுகின்றனர்

## - சு. க. எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் அமைச்சர்களின் தனிப்பட்ட இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு சகல மக்களும் அஞ்சுகின்றார்கள் என்று மொனராகலை மாவட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர் காமினி விஜேமுனி சொய்சா நேற்று ஏ. எவ். பி. செய்தித் தாபனத்திடம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த அச்சுறுத்தல் காரணமாக கிராம மக்கள் தேர்தல்களைக் கண்டே அஞ்சுகின்றனர் கடந்த காலங்களில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களில் சுமார் ஐயாயிரத்திற்கு அதிகமானவர்கள் மாணவர்கள் ஆவர். இருபதாயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் தமது படிப்பை இடைநிறுத்தியுள்ளனர். எனவே இத்தகைய அநுபவங்களால் கிராம மக்கள் தேர்தல்களைக் கண்டே அஞ்சுகின்றனர்.

இராணுவத்தினர் அல்லாத சிலர்-சில குழுக்களைச் சேர்ந்தவர்கள் இராணுவ உடை அணிந்து தொலைக்காட்சியில் தோன்றுகின்றனர். டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களின் இத்தகைய செயலைநாம் எந்த நிலையிலும் அனுமதிக்க முடியாது. இவர் எந்த இராணுவ அணியைச் சேர்ந்தவர்? இவரது பதவி என்ன? இவர் எந்த முகாமைச் சேர்ந்தவர்? சாதாரண இராணுவ ஆட்சேர்ப்புகளுக்கு முரணான முறையில் இவர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். அரசியல் இலாபத்திற்காகஇவருக்குஇராணுவப்பதவி வழங்க முடியாது.

இத்தகையவர்களுக்கு பதவி வழங்குவதை நாட்டின் மீதும் இராணுவத்தின் மீதும் உண்மையான நம்பிக்கை கொண்ட எவரும் விரும்பமாட்டார்கள். இந்தியா தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்தது. அதனை நாம் எதிர்த்தோம். இனத்திற்கும் மதத்திற்குமென தனித்தனி இராணுவ அமைப்புகளை நாம் கொண்டிருக்க முடியாது. இத்தகைய தனிப்பட்ட இராணுவ அமைப்புகள் நாட்டில் மீண்டும் வன்முறை தோன்றுவதற்கே வழி வகுக்கும்.

நாட்டிற்கான இராணுவத்தால் உங்களுக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது. ஆனால் அமைச்சர்களின் தனிப்பட்ட இராணுவங்களால் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்று முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா ஒரு தடவை கூறியிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்களின் தனிப்பட்ட இராணுவம்போன்றேஹெரோயின் விற்பனையாளர்களும் கூட இராணுவ அமைப்புக்களை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே தான் நாட்டில் சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெறவேண்டுமாயின் அரசாங்க இராணுவத்தைத் தவிர ஏனைய சகலதினதும் ஆயுதங்களும் மீளப்பெறப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஆய்வுகூடப் பணியாளர்; 28க்கு முன் விண்ணப்பிக்குக

[யாழ்ப்பாணம்]

வடகிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளிலுள்ள ஆய்வு கூடப் பணியாளர், பாடசாலைத் தொழிலாளர், காவலாளர், நூல்நிலைய பணியாளர் மற்றும் சுகாதாரத்தொழிலாளர் ஆகிய நிரந்தர பதவிகளுக்கான விண்ணப்பங்களை அவரவர்க்கு அண்மையிலுள்ள கோட்டங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விண்ணப்பப் படிவங்கள் திருக்கோணமலை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தியோகஸ்தர் ஒருவர்மூலம் நேரடியாக அனுப்பி வைக்கப் படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்கள் முன்னர் கோரப்பட்டமை தெரிந்ததே. [பா]

# மாகாணசபை தேர்தல்; கடும் போட்டி நிலவும்

## -பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் களம் கடும் போட்டி நிலவும் இடமாக இருக்கும் எனவும், அண்மைக் காலத் தேர்தல்களைப் போலன்றி இத் தேர்தலில் போட்டி கடுமையானதாக இருக்கும் எனவும் சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் சகல பொலிஸ் நிலையங்களையும் எச்சரித்து உஷார் படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. சகல பொலிஸாரினது லீவுகளும் நேற்று முன்தினம் முதல் மாகாணசபைத் தேர்தல் முடியும்வரை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் பலி

(கொழும்பு)

புல்மோட்டை - அனுராதபுரம் வீதியில் கடந்த 13-ம் திகதி சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தாக்குதல் சம்பவம் புல்மோட்டை - அனுராதபுரம் வீதியில் 10ஆம்மைல் கல் பகுதியில் நடைபெற்றதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# தேர்தலைக் கண்காணிக்க 50ஆயிரம்பேர் நியமனம்

[கொழும்பு]

நடைபெற இருக்கும் மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிக்க 16 பொது நிறுவனங்களைச் சேர்ந்த தொண்டர்கள் உட்பட 50 ஆயிரம் பேருக்கு தேர்தல் ஆணையாளரின் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

எதிர்க்கட்சிகள், பொது நிறுவனங்கள் என்பன தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து சுதந்திரமான தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்குமாறு விடுத்த கோரிக்கையை அடுத்தே இவ் அங்கிகாரம் வழங்கப்பட்டது.

இதுவரை நடைபெற்றுள்ள 64 தேர்தல் மோசடிகள் குறித்து விசாரணைநடாத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - ஆலரஞ்சாட்டி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இம்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரைக்கும் உள்ள பத்து நாட்கள் நடைபெறவுள்ளன.

விழா ஆரம்ப நாளன்று கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு பகல் 9.00 மணியளவில் முருகப்பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும் தொடர்ந்து மாலை விசேட உற்சவமும் நிகழும்.

# வீரவணக்க கூட்டம்

(தென்மராட்சி)

கொடிகாமம் வட்டத்திற்கு உட்பட்ட 4ஆம் மாதம் வீரச்சாவைத் தழுவிய மாவீரருடைய மாதாந்த நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று இரவு 7மணிக்கு மிருசுவில் திலீபன் நகரில் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். பின்பு கலை நிகழ்ச்சியும் இடம் பெறும். முதலில் மாவீரருடைய பெற்றோர் கௌரவிக்கப்படுவர். (86)

## பெறுபேறுகள் வெளியிடப்பட்டது

வர்த்தக முகாமைத்துவம், வர்த்தக மாணி, கலைமாணி, விஞ்ஞானமாணி பரீட்சைகளின் பெறுபேறுகள் யாழ். பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

## விளையாட்டு

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி (24-4-93) சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

இப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோத உள்ளது.

இப்போட்டி ஏற்கனவே யாழ். சம்பத்திரிசியார்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று இடை நிறுத்தப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது. (17)

❋ ❋ ❋

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள ஆட்ட விழா இன்று வியாழக்கிழமைகாலை7.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் வடமராட்சி கிழக்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. க. ஈஸ்வரபாதம் தலைமையில் தடகள விழா நடைபெறும்.

❋ ❋ ❋

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கரபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நாளை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும், மட்டுவில் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வரா அணியும் விளையாடவுள்ளன. இதேவேளை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் உரும்பராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் ம. ம. வி. அணியும். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரிஅணியும் விளையாடவுள்ளன.

# தமிழக சட்டபேரவையில்

# பாகிஸ்தான் சம்பவங்களை அலட்சியப்படுத்த முடியாது

ளாதாரத் தடையை விதித்தபோது எரிபொருளுடன் சேர்த்து மின்சார விநியோகத்தையும் முற்றாகத் தடைசெய்ய முற்பட்டது. இதன் மூலம் தமிழரின் பொருளாதாரத்தை முற்றாக முடங்கச் செய்வதே சிறிலங்கா அரசின் திட்டமாக இருந்தது.

இருப்பினும், மின்சாரத்துறை சகல ஊழியர்கள், தொலைத்தொடர்பு அலுவலக ஊழியர்கள் ஆகியோர்களுக்கான சம்பளங்களை - காலதாமதம் ஆகியபோதும் - தொடர்ச்சியாக வழங்கியே வந்தது. ஆனால், திடீரென இவ் அலுவலக ஊழியர்களை அரசாங்கம் வெளிமாவட்டங்களுக்குமாற்றம் செய்துள்ளமையானது சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து தெளிவான ஒரு முடிவிற்கு வந்து விட்டதாகவே எண்ண வைக்கின்றது.

அதாவது, இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு உடனடியாகக் காணும் முயற்சியை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாகவோ, அன்றி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு இப்பொழுது காண முடியாது என்று அரசாங்கம் கருதுவதாகவோ எண்ண வைக்கின்றது. ஏனெனில் சுமார் மூன்று வருடங்கள் மின்சார சபையினருக்கும், தொலைத்தொடர்பு அலுவலர்களுக்கும் ஏதோ ஒரு நம்பிக்கையில் வடக்கில் வைத்து சம்பளம் வழங்கிய அரசாங்கம் தற்பொழுது தனது கொள்கையை திடீரென மாற்றியுள்ளது.

இதில், எதுவாக இருப்பினும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பற்றி அண்மையில் அரசாங்கம் சிந்திக்கப்போவதில்லை என்பதையே இது காட்டுவதாகவுள்ளது. இந்நிலையானது, அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்போவதாகக் கூறிவருவது ஒரு ஏமாற்று நடவடிக்கை என்பதையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

இதற்கு தென்னிலங்கையில் நிலவும் அரசியற் சூழ்நிலையும் அரசாங்கத்தைப் பொறுத்து சாதகமாக உள்ளதாகவே உள்ளது. மாகாணசபைத் தேர்தலில் தீவிரமாக இறங்கியுள்ள எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சினை குறித்து நிலையான கொள்கை எதையும் கொண்டிருக்கவில்லை. இனப்பிரச்சினை பற்றிப் பேசினாலும், தமிழர் ஏற்கக் கூடிய திட்டம் ஒன்றை அவர்கள் வைக்கவோ, அன்றி அரசாங்கம் வைக்க வேண்டும் என வற்புறுத்தவோ அவர்கள் தயாராக இல்லை. அவை தமது 'வாக்கு வங்கியை'ப் பாதிக்கும் என எண்ணுகின்றன. இதனால் இராணுவ வெற்றி குறித்தே அவர்களும் பேசுகின்றனர்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கக் கட்சிக்கு இல்லாத நிலையில், அரசியல் தீர்வு குறித்து பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டிய நிலை அரசிற்கு இருப்பதாக இல்லை. ஆகையால், வடபகுதியில் தொடர்ந்தும், அரச அதிகாரிகளை வைத்திருப்பதைத் தவிர்ப்பதற்கு அரசு முற்படுவதாகத் தெரிகின்றது.

இது, தமிழ் மக்களையும் தனது பிரசைகளாகக் கூறிக்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் அவர்களுக்கு வழங்கவேண்டிய நியாயமான உரிமைகளை திட்டமிட்டே புறக்கணிப்பதைக் காட்டுவதாகும். இலங்கையின் அபிவிருத்தி பற்றிப் பேசும் அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது, திட்டமிட்டே தமிழர் பிரதேசத்தின் அபிவிருத்தியை அழிப்பதற்கான நடவடிக்கையுமாகும்.

---

சேர்ப்புகளுக்கு முரணான முறையில் இவர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். அரசியல் இலாபத்திற்காகஇவருக்குஇராணுவப்பதவி வழங்க முடியாது.

இத்தகையவர்களுக்கு பதவி வழங்குவதை நாட்டின் மீதும் இராணுவத்தின் மீதும் உண்மையான நம்பிக்கை கொண்ட எவரும் விரும்பமாட்டார்கள். இந்தியா தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்தது. அதனை நாம் எதிர்த்தோம். இனத்திற்கும் மதத்திற்குமென தனித்தனி இராணுவ அமைப்புகளை நாம் கொண்டிருக்க முடியாது. இத்தகைய தனிப்

---

இடமாக இருக்கும் எனவும், அண்மைக் காலத் தேர்தல்களைப் போலன்றி இத் தேர்தலில் போட்டி கடுமையானதாக இருக்கும் எனவும் சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியுள்

படுகின்றது. சகல பொலிஸாரினது லீவுகளும் நேற்று முன்தினம் முதல் மாகாணசபைத் தேர்தல் முடியும்வரை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் பலி

(கொழும்பு)

புல்மோட்டை - அனுராதபுரம் வீதியில் கடந்த 13-ம் திகதி சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தாக்குதல் சம்பவம் புல்மோட்டை - அனுராதபுரம் வீதியில் 10ஆம்மைல் கல் பகுதியில் நடைபெற்றதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

---

பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். பின்பு கலை நிகழ்ச்சியும் இடம் பெறும். முதலில் மாவீரருடைய பெற்றோர் கௌரவிக்கப்படுவர். (86)

## பெறுபேறுகள் வெளியிடப்பட்டது

வர்த்தக முகாமைத்துவம், வர்த்தக மாணி, கலைமாணி, விஞ்ஞானமாணி பரீட்சைகளின் பெறுபேறுகள் யாழ். பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

---

யளவில் அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும், மட்டுவில் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வரா அணியும் விளையாடவுள்ளன. இதேவேளை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் உரும்பராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் ம. ம. வி. அணியும். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரிஅணியும் விளையாடவுள்ளன.

---

# தமிழக சட்டபேரவையில் ஜனநாயக ஆட்சி இல்லை

## காங்கிரஸ் - தி. மு. க. புகார்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவை ஜனநாயக முறையில் இயங்கவில்லை என்றும், பேரவைத் தலைவர் அதனைக் கண்டு கொள்வதாக இல்லை என்றும் காங்கிரஸ் மற்றும் தி. மு க. பிரதிநிதிகள் தனித்தனியே தமிழக ஆளுநர் பீஷ்மன்நாராயண் சிங்கை சந்தித்து முறையிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் தூதுக் குழுவில். கேரள மாநில முன்னாள் ஆளுநர் பா. இராமச்சந்திரன், தமிழக காங்கிரஸ் கட்சியின் என். என். மணிவர்மா, டி. என். அனந்தநாயகி ஆகியோரும், தி. மு.க. சார்பில் தலைமை நிலைய செயலாளர் கே. குப்புசாமி, செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா மற்றும் சா. கணேசன் ஆகியோரும் ஆளுநரைச் சந்தித்த தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

தமிழக சட்டப் பேரவையில் சட்டசபை உறுப்பினர்கள் இரவில் கூட பேரவைக்குள் தங்கி உள்ளிருப்பு போராட்டம் நடாத்தியிருப்பதும், ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தின் வலுமிக்க எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து போர்க்கொடி தூக்கியிருப்பதும் இதுவே முதல்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆளுங்கட்சி இறுமாப்பிற்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

பேரவையில் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் ஜனநாயக விரோதமாகநடந்துகொள்வதாகவும், எதிர்க்கட்சியின் குரலுக்கு மதிப்பளிப்பதாக இல்லை என்றும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்க்கட்சியினரையும், அவர்களது கருத்துக்களையும் துச்சமாகக் கருதி ஆளும் கட்சியினர் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியிருப்பதுடன், ஆளும் கட்சியினரின் இறுமாப்பு போக்கையும் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வாழப்பாடியை பாதுகாக்க பொலிசாரிடம் கோரிக்கை

[சென்னை]

காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவரான வாழப்பாடி இராமமூர்த்திக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் அவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கும்படி மத்திய அரசும், மாநில அரசும், மாநில காவல் துறையினரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## புதுச்சேரி அ. தி. மு. க. வினர் அடையாள உண்ணாவிரதம்

(புதுச்சேரி)

யூனியன் பிரதேசமான புதுச்சேரியில், அ. இ. அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆறுபேரும் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் ஒன்றை மேற்கொண்டனர். அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரான யூ சி. ஆறுமுகம் பொலிஸ் அதிகாரிஒருவரால்கடந்ததிங்களன்று தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை தொடர்ந்து, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இக் குற்றச்சாட்டு பற்றி இலாகா மட்டத்திலான விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில முதல்வர் வி. வைத்தியலிங்கம் கூறியுள்ளார்.

## தொழிலுக்கு தடை

(கோலாலம்பூர்)

வெளிநாட்டவர்கள் தொழில் வாய்ப்பு பெறுவதை மலேசிய அரசு தடைசெய்துள்ளது. தற்போது இங்கு இரண்டு லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு ஊழியர்கள் பதிவு பெற்று வேலை செய்வதாகவும் கூறப்படுகிறது.

## பாகிஸ்தான் சம்பவங்களை அலட்சியப்படுத்த முடியாது

### இந்திய வெளியுறவு அமைச்சர்

(டில்லி)

பாகிஸ்தானில் தற்போது நடந்து வரும் சம்பவங்கள் குறித்து இந்தியா அலட்சியமாக இருந்துவிட முடியாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் மக்களவையில் பேசும் போது தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில், அந்நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் முற்றிலும் அந்நாட்டின் உள்விவகாரங்கள் தான். எனினும், அங்கு நிகழும் சம்பவங்களின் விளைவுகளுக்கும் நமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொதுவான நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியா ஒரு ஜனநாயக நாடாக இருப்பதால் பாகிஸ்தானிலும் ஜனநாயகம் தழைத்து ஓங்குவதையே இந்தியா விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

## பட்ஜெட்டை எதிர்க்க இடதுசாரிக் கட்சிகள் முடிவு

(டில்லி)

பாராளுமன்றத்தில் பட்ஜெட் யோசனைகளை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது. மற்றைய இடதுசாரிக் கட்சிகளும், சமய சார்பற்ற சக்திகளும் இத்தகைய ஒரு போக்கையே கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்சின் சிங் சுர்ஜித் செய்தியாளர்களிடம் பேசும்போதுதெரிவித்தார்.

## ஐ. நாடுகள் சபை மேலும் ஜனநாயகமாக வேண்டும்

(டில்லி)

ஐக்கிய நாடுகள் சபையானது மேலும் வெளிப்படையாகவும், ஜனநாயக பூர்வமாகவும், செயற்பட வேண்டுமென புதுடில்லியில் கூடிய ஜி 15 நாடுகளின் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ஜி 15 எனப்படும் 15 வளரும் நாடுகளின் குழுவானது புதுடில்லியில் கடந்தவாரத்தில் கூடியபோது நிறைவேற்றிய மற்றுமொரு தீர்மானத்தில், முதலீடுகள், தொழில்நுட்பம், மற்றும் கடன்களைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமான விடயங்களில் ஜி 7 எனப்படும் தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகளுடன் பேச்சு நடத்த இந்தியாவிற்கு அவை அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜி 7 நாடுகளின் மாநாடு ஜப்பானில் நடைபெறுவதற்கு முன்பாக இந்திய அமைச்சர் ஒருவர் ஜப்பான் சென்று பேச்சு நடத்தவும் இந்தியா கேட்கப்பட்டுள்ளது.

## உலகம் முழுவதும் 20 மில்லியன் அகதிகள்

உலகம் முழுவதும் தற்போது 20 மில்லியன் அகதிகள் உள்ளதாக ஐ. நா. அறிக்கை ஒன்று கூறுகின்றது. 1978 இல் 2.8 மில்லியனாக இருந்த அகதிகள் தொகை இப்போது 20 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் 70 மில்லியன் மக்கள் தமது சொந்த நாடுகளிலேயே அகதிகளாக வாழும் அவல நிலை உள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈழநாதம்

# சட்டப்பேரவைசெய்திகள் வெளியிடுவதில் பாரபட்சம்

## சேடப்பட்டி குற்றச்சாட்டு

[சென்னை]

இந்திய வானொலியும் தொலைக்காட்சியும் சட்டப் பேரவைச் செய்திகளை வெளியிடும் போது நடந்து கொள்ளும் முறை பற்றி தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டிமுத்தையா நேற்று குற்றஞ்சாட்டினார்.

சில நாட்களாகவே இந்திய வானொலியும், தூர தர்சன் தொலைக்காட்சியும் சட்டப் பேரவை செய்திகளை வெளியிடுவதில் பாரபட்சம் காட்டி நடப்பதாக தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று குற்றஞ்சாட்டினார்.

இவை தங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்ததை படம்பிடிக்க தூரதர்ஷன் படப்பிடிப்பு குழுவினர் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவின் அனுமதியின்றி நுழைய முயன்றதாக நேற்று இராஜ்யசபாவில் அ. தி. மு.க வினர் குற்றஞ்சாட்டினர்.

சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருப்பதை படம்பிடிக்குமாறு தொலைக்காட்சிக்கு மத்திய அரசு உத்தரவிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

### முஸ்லிம்லீக் தலைவர் கொலை

(டில்லி)

மூஸ்லிம் லீக்கின் முக்கிய தலைவரான மௌலானா ஜிஆப்ரீன் புகாலி நேற்று பம்பாய் வீதியொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி தாங்கிய நான்கு பேர் கொண்ட குழு ஒன்று இவரைச் சுட்டுக் கொன்றது. மௌலானா பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பிறகு பல புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

## சட்டசபை காவலர் மீது காங்கிரஸ் உறுப்பினர் தாக்கு

### சேடப்பட்டி முத்தையா தெரிவிப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் சபைக்காவலர் 8 பேர்களை தாக்கியதற்காக காங்கிரஸ் உறுப்பினர் இருவரும், தி. மு. க. உறுப்பினர் பரிதி இளம் வழுதியும் கைது செய்யப்படுவர் என முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

இரு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 8 காவலர்களை இவர்கள் நெஞ்சில் குத்தி எட்டி உதைத்ததாகவும் இதனால் அவர்களில் சிலர் கடும் காயமுற்று இப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாகவும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏதோ அதிகாரம் தமக்கிருப்பதாக எண்ணி செயற்படுகின்றனர் என ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார்.

## வாழப்பாடி - ராவ் டில்லியில் சந்திப்பு

(டில்லி)

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்தித்துப் பேச்சு நடாத்தினர். எனினும் பேச்சு விபரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

தமிழ்நாடு சட்ட சபையில் நடைபெற்ற உள்ளிருப்பு போராட்டம் தொடர்பாக நரசிம்மராவிடம் எடுத்துக் கூறப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.


### அறிவித்தல்

சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்மன் ஆலயத்
திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல்
எதிர்வரும் (24-04-1993) சனிக்கிழமை
காலை 10-00 மணிக்கு ஆலய வெளி வீதியில்
நடைபெறும்.

-நிர்வாகம்

(4739)


### அதிபர்களுக்கான முக்கிய கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 26ஆம் திகதி திங்

வாக்குப் பெட்டிகளை

## பொலிசார் எருத்து செல்ல எதிர்க்கட்சி ஆட்சேபம்

[கொழும்பு]

மாகாணசபை தேர்தலில் வாக்களிப்பு நடைபெற்ற நிலையத்தில் இருந்து வாக்குகள் எண்ணப்படும் இடத்திற்கு வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லும் போது வாக்குப் பெட்டிகளை பொலிசாரிடம் ஒப்படைக்க கூடாது என்று தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக சுதந்திரக்கட்சி நிமால்சிறிபால தெரிவித்தார்.

பொலிசாரிடம் ஒப்படைக்கும் சமயம் தான் அதிகளவு கள்ள வாக்குகள் அளிக்கப்பட்டதாகவும், தாம் விரும்பிய அளவு வாக்குகள் சென்ற தேர்தல்களின் போது இந்தச் சமயத்தில்தான்போடப்பட்டதை தாம் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்

## நக்சலைட்டுகள்கண்ணிவெடி 16 பொலிசார் பலி

[பம்பாய்]

மகராஷ்டிரா மாநிலத்தில் கிராமம் ஒன்றில் நக்சலைட் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி அம்மாநிலத்தைச் சேர்ந்த 16 பொலிசார் பலியாகினர். இவர்களில் 9 பேர் விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் பயணம் செய்த பொலிஸ்வான் முற்றாகச் சேதமடைந்தது.

## மீண்டும் பிரேத பரிசோதனை நீதிமன்றம் உத்தரவு

[சென்னை]

சிதம்பரனார் மாவட்டம் கோவில் பட்டியில் விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் போது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்த இருதைய யோசப் ரெட்டியார் என்பவரது சடலத்தை மீண்டும் வெளியே எடுத்து பிரேத பரிசோதனை செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவரதுமகன் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபாலசாமி தாக்கல் செய்த ரிட்மனு ஒன்றை விசாரித்த உச்ச நீதிமன்றம், அந்த நபர் மாரடைப்பால் மரணமானரா? பொலிஸ் துப்பாக்கிச் சூட்டினால் மரணமானாரா? என்பதைக் கண்டறிய பிரேத பரிசோதனை நடத்தும்படி காவல்துறையினரைப் பணித்துள்ளார்.

## அறவழி மாணவர்களின் விடுமுறைகால சந்திப்பு

அறவழிப் போராட்டக்குழுவின் கல்வித் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு விடுமுறைகாலச் சந்திப்பு ''உறவு கொண்டு உயர்வுபெறுவோம்'' என்னும் தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை அறவழிசெயலகத்தின் உபதலைவர் திரு சி. ச. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. ஜோன் குட்கான்ட் அவர்களும், முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிஅரச அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினரர்களாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. கே. கணேசலிங்கம், யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சிங்கராசா மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இராணுவ வன்செயல்களினால் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 174 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது இவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மற்றும் உடுப்புக்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வன்முறையை

### திறை சேரியில் தவறில்லையாம்

(கொழும்பு)

மக்கள் மயமாக்கப்பட்ட சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் போன்றவற்றின் வடபகுதி ஊழியருக்கான மாதாந்த சம்பளங்கள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கு திறைசேரி நிதி ஒதுக்காமையே காரணம் என்று கூறப்படுவதற்கு திறைசேரி மறுப்புத் தெரிவித்துள்



சாவகச்சேரி நவீன சந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் நிலத்துக்கடியிலிருந்து மீட்கப்பட்ட மண்டை ஓடுகளுடன் கிடைத்த நகைகளைப் படத்தில் காணலாம்,

## ரயில் நிலையத்தில் வெடி விபத்து

### 6 பேர் பலி: ரயில் நிலையம் சேதம்

இந்தியாவில் ஒருரயில் நிலையத்திற்கு அருகே நேற்று பிற்பகல் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஆறுபேர் உயிரிழந்ததுடன் 12 பேர்காயமடைந்தனர்.

துப்பாக்கி தோட்டாக்கள் வைக்கப்பட்டிருந்த இரண்டு பெட்டிகள் ஒரு ரயிலில் இருந்து இறக்கப்படும்போது வெடித்துச் சிதறியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வெடிவிபத்தினால் ரயில் நிலைய நடைபாதையின் இரு கூரைகள் பலத்த சேதமடைந்தன.

## 50,000 மாணவர்களின் பல்கலை. அனுமதி தாமதம்

(கொழும்பு)

1991 - 92 வருடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் பரீட்சையில் பல்கலைக்கழக தகுதி பெற்ற 50,000 மாணவ மாணவிகளுக்கு பல்கலைக்கழகம் செல்ல மேலும் ஒரு வருட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

1991ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்களை மானிய ஆணைக்குழு கோரிய போதிலும் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வது சம்பந்தமாக அண்மையில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு இணங்க 1990ஆம் ஆண்டின் பொறியியல் பகுதிக்கு மாணவர்களை தெரிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுவது மேலும் பல மாதங்களுக்கு பிற்போடப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் 1991 க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய 20,000 பொறியியல் மாணவர்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இத் தாமதத்தினால் 1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு அனுமதிப்பது மேலும் காலதாமதமாகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய-அமெரிக்ககடற்படை வருட இறுதியில் ஒத்திகை

(டில்லி)

இரண்டாவது இந்திய-அமெரிக்க கூட்டு கடற்படை பயிற்சி ஒத்திகை இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ளது. இந்திய கடற்படையுடன் பசுபிக் பகுதியில் நிலைகொண்டுள்ளந்த காலங்களில் இதுவரையில் இந்திய கடற்படையினர் பிரிட்டன், பிரான்ஸ், ஓமன், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷிய கடற்படைகளுடன் கூட்டு ஒத்திகையை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாய் வீதியொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி தாங்கிய நான்கு பேர் கொண்ட குழு ஒன்று இவரைச் சுட்டுக் கொன்றது. மௌலானா பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பிறகு பல புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

## வாழப்பாடி - ராவ் டில்லியில் சந்திப்பு

(டில்லி)

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்தித்துப் பேச்சு நடாத்தினர். எனினும் பேச்சு விபரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

தமிழ்நாடு சட்ட சபையில் நடைபெற்ற உள்ளிருப்பு போராட்டம் தொடர்பாக நரசிம்மராவிடம் எடுத்துக் கூறப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.


## அறிவித்தல்

சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல்

எதிர்வரும் (24-04-1993) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(4739) —நிர்வாகம்



## கண்ணீர் விசும்பல்கள்



## செல்வி இராஜினி இரட்ணம்

[மாணவி- 2-ம்வருட உயிரியல் விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக்கழகம்]

மண்ணில்: 10.08.1969

விண்ணில்: 20.04.1993

பள்ளி வீதியில் நீ நடந்த சுவடுகள்
மாறும் முன் - வசந்தத்தை
துணை கொண்டு
வானவீதியில் வலம் வரப் போனாயா?
தென்றல் காற்றோடு - கைகோர்த்த
முல்லைப் பூவே!
உன் சின்ன இதழின் - நேற்றைய
சிரிப்புக்கள் - இன்றும் கூட
கோடை வெய்யிலுக்கு
குளிரூட்டுகின்றது...
உன் பிரிவு கண்டு பன்னீர் மரங்கள்
விசித்து அழுகின்றது
கனவுகளைச் சுமந்து
இளவேனிற் காலத்துடன்
சிரித்து மகிழ்ந்த
கவிக்குயிலே!!
நெஞ்சின் வேதனையால்
விழிவழி அருவி கொண்டு - எம்
கண்ணீர் விசும்பல்களை
காணிக்கையாக்குகின்றோம்

யாழ், இந்து மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்கள்.

(4738)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### அதிபர்களுக்கான முக்கிய கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவிருப்பதால் சகல அதிபர்களும் சமுகமளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### புத்தக கண்காட்சி

(உரும்பராய்)

உரும்பராய் சுபீட்ச நூலக முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணி முதல் மாலை 5.00 மணி வரை புத்தகக் கண்காட்சியொன்று நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

### சட்டசபை

இதேவேளை நேற்று 2 பஸ்கள் தீக்கிரையாக்கப் பட்டதாகவும் 14 பஸ்கள் கல்வீச்சில் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆண்டு 5

பாடசாலை—28 பேர், கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை—29பேர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி— 12 பேர், வட இந்து மகளிர் வித்தியாலயம் — 17 பேர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி 17 பேர். புற்றளை மகா வித்தியாலயம் — 20பேர், தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் — 20 பேர், சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை—19 பேர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி—10பேர், காரைநகர் யாழ்ட்ரன் கல்லூரி—11 பேர், செல்வா தொடக்க நிலைப் பள்ளி — 12 பேர், இணுவில் அ மி. த.க. பாடசாலை—19 பேர் (பா)

முறைகாலச் சந்திப்பு "உறவு கொண்டு உயர்வுபெறுவோம்" என்னும் தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை அறவழிசெயலகத்தின் உபதலைவர் திரு சி. ச. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. ஜோன் குட்கான்ட் அவர்களும், முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிஅரச அதிபர் திரு.பூ.சுந்தரம்பிள்ளையும்,சிறப்பு விருந்தினரர்களாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. கே.கணேசலிங்கம், யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சிங்கராசா மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களும் கலந்து

### வன்முறையை

அரசாங்கத்தின் குண்டுகளே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் விடுதலைப் புலிகள் வங்கிகள், உல்லாச பிரயாணிகள் ஹோட்டல், இந்திய தூதுவராலயம், அரச கட்டடங்கள் ஆகியவற்றை தாக்கலாம் என அரச செய்தி ஸ்தாபனங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சட்டசபை உண்ணா

சட்டப்பேரவை நேற்றுக் காலை முன்னதாக கூடிய போது நேற்று மாலைமுதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பேரவை சபாநாயகர் சபைக்குள் வந்து வழமைபோல் திருக்குறள் படிக்கக் கூடாது என கோஷமிட்டனர் நீதி கிடைக்காத இடத்தில் குறளை ஓதுவது சாத்தான் வேதம் ஓதுவது போலாகும் என்று கூக்குரலிட்டனர்.

சபாநாயகர். எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தை வெளியேறுமாறு உத்தரவிட்டார். அவர் மறுக்கவே குழப்பம் மேலும் அதிகரித்தது. முழு காங்கிரஸ் உறுப்பினர்களையும் வெளியேறும்படி சேடப்பட்டி முத்தையா ஆணையிட்டார். அவர்கள் அதற்கும் மறுக்கவே சபைக் காவலர்கள் வரவழைக்கப்பட்டு அனைவரும் பலவந்தமாக தூக்கிச் செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஏனைய எதிர்க்கட்சிஉறுப்பினர்களும் காவலர்களால் வெளியேற்றப் பட்டனர்.

பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சென்னை கோட்டை முன்பாக வீதியில் மறியலில் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று பிற்பகல் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் நேற்று மாலை அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இழந்த குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 174 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது இவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மற்றும் உடுப்புக்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### திறைசேரியில் தவறில்லையாம்

(கொழும்பு)

மக்கள் மயமாக்கப்பட்ட சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் போன்றவற்றின் வடபகுதி ஊழியருக்கான மாதாந்த சம்பளங்கள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கு திறைசேரி நிதி ஒதுக்காமையே காரணம் என்று கூறப்படுவதற்கு திறைசேரி மறுப்புத் தெரிவித்துள்ளது.

வடபகுதி ஊழியருக்கான மாதாந்த சம்பளம் அமைச்சரவை அங்கீகாரத்தின்பேரில் தான் வழங்கப்படுகின்றது. உப்புக்கூட்டுத்தாபன வடபகுதி ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக உரியகாலத்தில் அமைச்சரவை அங்கீகாரத்தை கூட்டுத்தாபன நிர்வாகம் பெற்றிருந்தால் தாமதம் ஏற்பட்டிருக்காது. இதை விடுத்து திறைசேரி நிதி ஒதுக்கவில்லை என்று கூறுவதில் உண்மை இல்லை என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

### மேதின ஏற்பாட்டு கலந்துரையாடல்

1993ஆம் ஆண்டு தொழிலாளர் தினமான மே மாதம் முதலாம் திகதி நடைபெற இருக்கும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் சம்பந்தமாக எதிர்வரும் சனிக்கிழமை 9.00 மணிக்கு வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. செல்லையா உருத்திரா தலைமையில் சங்கத்தில் கலந்துரையாடல் நடைபெறும். இக் கலந்துரையாடலுக்கு வடமராட்சி, தென்மராட்சி தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, யாழ். மாவட்டம், நல்லூர் ஆகிய பகுதி பிரதிநிதிகளையும் சுருட்டுத் தொழிலாளர்களையும் கலந்து கொண்டு மேதின ஏற்பாடு சிறப்புற அமைய பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### வெளி

இருப்பதாக பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க கூறியுள்ளார்.

தம் ஏற்பட்டிருக்கிறது.

1991ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்களை மானிய ஆணைக்குழு கோரிய போதிலும் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை தெரிவுசெய்வது சம்பந்தமாக அண்மையில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு இணங்க 1990ஆம் ஆண்டின் பொறியியல் பகுதிக்கு மாணவர்களை உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய 20,000 பொறியியல் மாணவர்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இத் தாமதத்தினால் 1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு அனுமதிப்பது மேலும் காலதாமதமாகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய-அமெரிக்ககடற்படை வருட இறுதியில் ஒத்திகை

(டில்லி)

இரண்டாவது இந்திய-அமெரிக்க கூட்டு கடற்படை பயிற்சி ஒத்திகை இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ளது. இந்திய கடற்படையுடன் பசுபிக் பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க கடற்படையில் 7ஆம் பிரிவு பங்குபற்றும்.

அதேசமயம் இந்தியக் கடற்படை இவ்வருட இறுதியில் தாய்லாந்து கடற்படையுடனும் கூட்டு ஒத்திகையை நடாத்த திட்டமிட்டுள்ளது. கடந்த காலங்களில் இதுவரையில் இந்திய கடற்படையினர் பிரிட்டன், பிரான்ஸ், ஓமன், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷிய கடற்படைகளுடன் கூட்டு ஒத்திகையை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் இந்த கூட்டு ஒத்திகை நடவடிக்கைகள் அது இந்து சமுத்திரத்தில் தனது சக்தியை வலுப்படுத்துவதற்கே என பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


நல்லூர் வீனஸ் விளையாட்டுக் கழக நிதி உதவிக்காக

"யாழ்-ரமணனின்" நெறியாள்கையில் புதிய பாடல்களுடன் "ராஜன்ஸ்" இசைக்குழுவினரின்

## "இதய கீதங்கள்"

இன்று 22-04-93 பிற்பகல் 4 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

* ரிக்கற்றுக்கள் மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

[4740] விளம்பர அன்பளிப்பு:- ராதிகா ஜுவல்லர்ஸ்


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9089

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-2585, 42-2323, 24-4153, 26-8674, 26-2327
42-0849, 28-0882, 24-6432